**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**முன்னிலை:- திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர் .**

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், ஆடி திங்கள் 29 ம் நாள்

**இடைக்கால மனு எண்.405/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 88/2025**

1. V.மோகன்குமார்
2. V.பரிமளா காந்தி ..மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. K. பாலசுப்பிரமணியம்
2. B. பரமசிவம்
3. B. கிருஷ்ணகுமார் ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 06.08.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A. தனபால் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.P.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையாகியும், நிகழ்த்திய இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் தீர்வுகாணும் வரை மனு சொத்து பொறுத்து எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :

2.1 அசல் வழக்கானது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை , செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் மற்றும் இதர பரிகாரங்களை கோரி மனுதார்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2 மனு சொத்து மற்றும் இதரச் சொத்துக்கள் திருப்பூர் தெற்கு தாலுாக்கா, கண்டியன் கோவில் கிராமத்தில் அமைந்துள்ளது. ஒரு பழனியம்மாள் மற்றும் வெங்கடரமணசாமி கவுண்டர் ஆகியோர்களின் வாரிசுகள் மனுதாரர்கள் ஆவார்கள். மனு சொத்தின் அருகே எதிர்மனுதாரர்களுக்கு பூமிகள் உள்ளது.

2.3 மனுதாரர்கள் தந்தை வழி பாட்டி வள்ளியம்மாள் கடந்த 28.10.1961ம் தேதியன்று அவரது இரு மகன்களாக மனுதாரர்களின் தகப்பனார் வெங்கடரமணசாமி கவுண்டருக்கும், அவரது சகோதரர் சுப்பிரமணிய கவுண்டருக்கும் மனு "A" அட்டவணைச் சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார். அதில் மேற்படி வள்ளியம்மாள் அவருக்கு வாழ்நாள் அனுபவம் கண்டு எழுதியதை. கடந்த 19.05.1963ம் தேதியன்று விடுதலை ஆவண எண் 930/1963ன்படி அவரது இரு மகன்களுக்கும் விடுதலை செய்து கொடுத்து விட்டார்.

2.4 கடந்த 20.05.1963ம் தேதியன்று தாவா "B" அட்டவணைச் சொத்து பொறுத்து மேற்படி சுப்பிரமணிய கவுண்டர் அவரது சகோதரரின் மனைவியான பழனியம்மாளுக்கும், அவரது தகப்பனார் பெரியசாமி கவுண்டருக்கும் கிரய ஆவணம் எழுதிக் கொடுத்தார். மேற்படி பெரியசாமி கவுண்டர் அவரது மகள் பழனியம்மாளை வாரிசாக விட்டு விட்டு இறந்து விட்டார். கடந்த 24.04.2017ம் தேதியன்று மேற்படி பழனியம்மாள் மனுதாரர்களையும், அவர்களது தகப்பனார்

வெங்கடரமணசாமி கவுண்டரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டார். அதன்பிறகு தாவா "A" மற்றும் "B" அட்டவணைச் சொத்துக்களை மனுதாரர்களும் அவரது தகப்பனாரும் கூட்டாக அனுபவித்து வந்தனர். மனுதாரரின் தகப்பனார் இறப்பிற்கு பின்னிட்டு தாவா "A" மற்றும் "B" அட்டவணைச் சொத்துக்கள் மனுதாரர்களின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது.

**2.5** திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு தாலூக்கா கண்டியன்கோவில் கிராமம் க.ச.எண்.711/2ல் உள்ள சொத்தில் மனுதாரர்களின் வீடு உள்ளது. அதன் வடபுறம் கிழமேல் பொதுவழி தடம் உள்ளது. மனுதாரர்கள் அவர்களது வீட்டில் அரிசி மில் வைத்து வியாபாரம் செய்து வருகிறார்கள். க.ச.எண்.711/2ல் உள்ள வழித்தடம் மூலம் தான் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் சொத்திற்கு செல்ல முடியும். மேற்படி பொது வழித்தடத்தை உபயோகித்து எதிர்மனுதாரர்களும் மனுதாரர்களின் முன்னோர்களும் கடந்த 80 ஆண்டுகளாக எந்தவித இடையூறும் இன்றி அவர்களின் சொத்துக்கு சென்று வந்தார்கள்.

**2.6** 1ம் மனுதாரரின் மகளின் திருமணம் 29.08.2025ம் தேதியன்று நடைபெற உள்ளதால் அது சம்பந்தமாக 06.06.2025ம் தேதி மனுதாரர்களும் அவர்களது உறவினர்களும் வெளியூர் சென்றிருந்தபோது மனுதாரர்களின் வீட்டின் முன்பும் மேற்படி பொது பாதையிலும் எதிர்மனுதாரர்கள் வேலி அமைத்து மனுதாரர்களின் வீட்டுக்கும் அவரது பூமிக்கும் செல்ல முடியாதவாறு ஏற்படுத்தி உள்ளார்கள்.

**2.7** மேற்படி சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது. மேற்படி க.ச.எண்.711/2ல் அரசால் குடிநீர் தொட்டி

கட்டப்பட்டுள்ளது. க.ச.எண்.715 மற்றும் 716/2 பூமிகளை அடைவதற்கு மேற்படி க.ச.எண்.711/2ல் உள்ள வழித்தடம் மட்டுமே உள்ளது. அவிநாசிபாளையம் காவல் நிலையத்தில் மனுதாரர்கள் கொடுத்த புகாரின் மீது விசாரணை நிலுவையில் இருந்த போது எதிர்மனுதாரர்கள் கம்பி வேலி அமைத்தார்கள். கடந்த 19.05.1963 மற்றும் 20.05.2023ம் தேதியிட்ட ஆவணங்களில் மேற்படி வழித்தட உரிமை தெளிவாக கண்டு எழுதப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தற்போது 8 அடி அகலமுள்ள பொது வழித்தடம் முழுவதையும் ஆக்கிரமிக்க முயற்சிக்கிறார்கள். அசல் வழக்கானது தாவா 8 அடி அகலமுள்ள தென்வடல் வழித்தடம் இருவருக்கும் பாத்தியம் என விளம்புகை பரிகாரம் கோரியும், அதில் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்து போட்டுள்ள கம்பி வேலியை அகற்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.8** கடந்த 18.06.2025ம் தேதியன்று தாவா பொது வழித்தடத்தில் எதிர்மனுதாரர்கள் சட்டத்திற்கு புறம்பாக அத்துமீறி நுழைந்து, மனுதாரர்கள் அவர்களது பூமிக்கு செல்லும் நுழைவாயிலை அடைக்க முயற்சி செய்தார்கள். எனவே, அசல் வழக்கில் தீர்வு காணும் வரை மனுதாரர்களின் தாவா சொத்தில் உள்ள அமைதியான அனுபவத்திலும் சுவாதீனத்திலும் உள்ள பொது வழித்தடத்தை மனுதாரர்கள் வழக்கம் போல் உபயோகிப்பதை பகுதியாகவோ, முழுவதுமாகவோ எதிர்மனுதாரர்களோ அவர்களது ஆட்களோ தடுக்கக் கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

**3.1** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான

ஒன்று. அது சட்டப்படியும், பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. க.ச.எண்.711/8 மற்றும் க.ச.எண்.711/7 ல் தென்மேற்கு மூலையில் சிறிய பகுதி மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது. க.ச.எண்.711/5, 711/6ல் பாதி பாகம் மற்றும் க.ச.எண்.711/7ல் 2/3 பாகம் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது. க.ச.எண்.711/4 மற்றும் 711/6ல் பாதி பாகத்தில் ஒரு குப்புசாமி என்பவருக்கு பூமி உள்ளது. க.ச.எண்.707ல் குப்புசாமிக்கு பூமி உள்ளது. மேற்படி பூமி க.ச.எண்.711/4ல் உள்ள அவரது பூமிக்கு அருகே உள்ளது. க.ச.எண்.707ல் இருந்து நேரடியாக அவரது பூமியை அடைய இயலும்.

**3.2** மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் மற்றும் குப்புசாமி ஆகியோருக்கு க.ச.எண்.711/2ல் சரிபாதி பூமி உள்ளது. க.ச.எண்.711/2ல் உள்ள பொது வழித்தடத்தில் குப்புசாமிக்கும் உரிமை உள்ளது. மேற்படி குப்புசாமியை மனுதாரர்கள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. க.ச.எண்.711/2ல் கிழமேற்காக தாவா வழித்தடம் உள்ளது. க.ச.எண்.711/1 மற்றும் 711/3ஐ அடைவதற்கு மேற்படியாளர்கள் அந்த தடத்தை பயன்படுத்தி வந்தார்கள். க.ச.எண்.711/2ல் கிழபுறம் தென்வடலாக பொதுவழித்தடம் இல்லை. மனுதாரர்களின் வீடு க.ச.எண்.711/8ல் தான் உள்ளது. க.ச.எண்.744ல் இருந்து மனுதாரர்களின் பூமிக்கு நேரடியாக செல்ல முடியும். எதிர்மனுதாரர்களின் முன்னோரான ராமசாமி என்பவரால் தாவா வழித்தடத்தில் விநாயகர் கோவில் கட்டப்பட்டுள்ளது.

**3.3** மனுதாரர்களோ அவரது முன்னோர்களோ தாவா வழித்தடத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் எப்போதும் இருந்தது இல்லை. தாவா வழித்தடத்தில் 2 மின் கம்பங்கள் நடப்பட்டு, மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களின் வீடுகளுக்கு கடந்த 60 ஆண்டுகளாக மின் இணைப்பு

வழங்கப்பட்டுள்ளது. 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் மனுதாரர் க.ச.எண்.711/1ல் எதிர்மனுதாரரின் பாகத்தை கேட்டு எதிர்மனுதாரர்கள் மறுத்ததால் க.ச.எண்.711/8 வழியாக வரும் பிஏபி தண்ணீர் குழாயை சேதப்படுத்த மனுதாரர்கள் முயற்சித்தார்கள்.

**3.4** 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் அவர்களது குடும்ப சொத்துக்களை அளந்து பாகம் பிரித்துக் கொண்டு அவர்களின் பூமியின் எல்லைகளில் இரும்பு கம்பி வேலியை அமைத்துள்ளார்கள். மனுதாரர்கள் 4 ஆண்டுகள் கழித்து கடந்த 06.06.2025ம் தேதியன்று மேற்படி கம்பி வேலி அமைக்கப்பட்டதாக கற்பனையாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள் தரப்பில், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3, நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில்,
" மனுதாரர்கள் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**6. <u>தீர்வு</u> :**

**6.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், க.ச.எண்.711/2ல் தென்வடலாக பொது வழித்தடம் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு உள்ளதாகவும், மனுதாரரின் சொத்திற்கு பிறகு மேற்படி

வழித்தடம் 12அடியில் உள்ளதாகவும், அதில் 9 மீட்டர் அளவில் எதிர்மனுதாரர் ஆக்கிரமித்துள்ளார் என்றும், அதனை நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலும், நிலஅளவையர் நீ.ம.சா.ஆ.5 வரைபடத்திலும் குறிப்பிட்டுள்ளார் என்றும், எதிர்மனுதாரர்கள் மேற்படி பொது வழித்தடத்தில் கம்பிவேலி அமைத்துள்ளார் என்றும், மனுதாரரின் பூமிக்கு செல்வதற்கு க.ச.711/2 ல் உள்ள பொது தடம் மட்டுமே வழித்தடம் என்றும், 1ம் மனுதாரரின் மகளின் திருமண வேலையாக அவர்கள் அனைவரும் கோயம்புத்தூர் சென்றிருந்த சமயத்தை பயன்படுத்தி எதிர்மனுதாரர்கள் கம்பிவேலி அமைத்து விட்டார்கள் என்றும், அது குறித்து காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டும் எவ்வித பதிலும் இல்லை என்றும், எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் கம்பிவேலி அமைத்ததை ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், அவ்வாறு எதிர்மனுதாரர்கள் சொல்வது உண்மையென்றால் அது குறித்து நடவடிக்கை எடுக்க கடந்த நான்கு ஆண்டு காலமாக மனுதாரர் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், க.ச.எண்.711/2ல் உள்ள கம்பிவேலியை அகற்ற கோரி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம், விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் க.ச.எண்.711/2ல் தான் தடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றும், மேற்படி தடமானது க.ச.எண்.711/9ல் ஜிரோ பாயிண்ட் ஆகிவிட்டது என்றும், க.ச.711/2ல் கிழமேல் வழித்தடம் மட்டுமே புழக்கத்தில் உள்ளது என்றும், க.ச.எண்.711/5ல் எதிர்மனுதாரர்களுக்கு பூமி உள்ளது என்றும், க.ச.எண்.711/1ல் மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரருக்கு பொதுவில் பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றும் மேற்படி பூமிக்கு செல்வதற்கு தான் கிழமேல் தடம் க.ச.711/2ல்

விடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் சொல்லும் தென்வடல் தடம் பூமியில் இல்லை என்றும், க.ச.எண்.711/8ற்கு தென்புறம் உள்ள ரோட்டின் வழியாக மனுதாரர்களின் பூமிக்கு நேரடியாக செல்லாம் என்றும், க.ச.எண்.711/2ல் செல்லும் தடம் மனுதாரர்கள் சொல்லும் க.ச.எண்.715 மற்றும் க.ச.716ஐ தொட்டுசெல்லவில்லை என்றும், க..ச711/7ல் தான் மனுதாரர்களின் வீடு உள்ளது என்றும், ஆனால் க.ச.711/2ல் வீடு உள்ளதாக தவறாக மனுவில் கூறியுள்ளார் என்றும், நீதிமன்ற ஆணையர் அறிக்கையான நீ.ம.சா.ஆ.1ல் தாவா தடத்தில் மின்கம்பம், தண்ணீர் தொட்டி மற்றும் விநாயகர் கோவில் ஆகிய நிரந்தர கட்டமைப்பு உள்ளதாக குறிப்பிட்டுள்ளதில் இருந்தே க.ச.எண்.711/2ல் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமப்பு செய்யவில்லை என்றும், அதில் மேற்படி மின்கம்பம், தண்ணீர்தொட்டி மற்றும் விநாயகர் கோவில் உள்ளது தெரியவருகிறது என்றும், மனுதாரர்கள் தாவா தடத்தின் உட்பிரிவை சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்றும், 80 ஆண்டு காலமாக மேற்படி விநாயகர் கோவில் உள்ளதால் தாவா தென்வடல் தடம் பயன்பாட்டில் இல்லை என்றும், மனுதாரர்கள் அசல் வழக்கில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் என்று முரணாக பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளதால் அது குறித்து சுவாதீன ஒப்படைப்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது தாவா தென்வடல் 8 அடி அகலம் கொண்ட பொது வழிதடம் குறித்து விளம்புகை பரிகாரமும், மேற்படி வழித்தடத்தில் உள்ள கம்பிவேலியை அகற்ற வேண்டி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் மேற்படி தென்வடல் 8 அடி அகல பொது

வழித்தடத்தில் மனுதாரர்கள்/வாதிகளின் அமைதியான அனுபவத்தையும், சுவாதீனத்தையும் இடையூறு செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** தாவா வழித்தடத்தை நீதிமன்ற ஆணையர் நிலஅளவையரின் உதவியுடன் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிலஅளவையர் வரைபடமான நீ.ம.சா.ஆ.4ல் க.ச.எண்.711/2ல் உள்ள பொது வழித்தடத்தில் தென்வடல் பகுதியில் கம்பி வேலி அமைத்து 0.06 ½ செண்ட் இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி கம்பிவேலி மனுதாரர்கள் சொல்வது போல் கடந்த 06.06.2025ம் தேதி அமைக்கப்பட்டதா அல்லது எதிர்மனுதாரர்கள் சொல்வது போல் 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் மத்தியில் அமைக்கப்பட்டதா என்பதை அசல் வழக்கின் தீர்வில் தான் முடிவு செய்ய இயலும்.

**6.5** க.ச.எண்711/2ல் உள்ள தாவா வழித்தடத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கம்பிவேலி அமைத்துள்ளதாக மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டு அது குறித்து செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்படி செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு முரணாக தாவா வழித்தடம் மனுதாரர்களின் சுவாதீனத்தில் உள்ளது போல் அது குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள்.

**6.6** நிலஅளவையர் வரைபடமான நீ.ம.சா.ஆ.4ல் க.ச.எண்.711/2ல் கம்பிவேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டிருந்தாலும்

மேற்படி கம்பிவேலியை அகற்றகோரி மனுதாரர்கள்/வாதிகள் தகுந்த காலவரையறைக்குள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்களா என்பதையும், அதன் தொடர்ச்சியாக மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா என்பதையும் இருதரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு அசல் வழக்கின் தீர்வில் தான் தீர்வு காண இயலும் என்று முடிவு செய்து மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, 18.08.2025ம் தேதியன்று பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.08.14 12:49:17 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>** : இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 28.10.1961 | செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 19.05.1963 | விடுதலைப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 29.08.2025 | திருமணபத்திரிக்கை | அசல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | - | பட்டா எண்.2378 | கணிணி நகல் |
| எ.ம.சா.ஆ.2 | - | பட்டா எண்.2378 | கணிணி நகல் |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>**:

| | | | |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | - | நீதிமன்ற ஆணையரின் அறிக்கை | அசல் |
| நீ.ம.சா.ஆ.2 | - | வட்ட சார்ஆய்வாளரின் வரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.3 | - | வட்ட சார்ஆய்வாளரின் வரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.4 | - | வட்ட சார்ஆய்வாளரின் வரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.5 | - | நிலஅளவையரின் சான்று | அசல் |

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.08.14 12:49:25 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்